# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.255/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.சா– 01 ( DW– 01) |
| பெயர் | :- | சின்னு |
| தேதி | :- | 24–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

கந்தமூப்பனின் மனைவிகள் ஒரே வீட்டில் வசித்தனரா தனிதனி வசித்தனரா என்றால் தனிதனி வீட்டில் வசித்தனர். அங்கம்மாள் கோனகாபாடி ஊரிலும் கந்தாயி சிக்கம்பட்டி ஊரில் வசித்தனர். இரு ஊர்களும் அருகருகில்தான் உள்ளன.

கந்தாயி மகன் முத்துசாமி இறந்தபோது அவருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 40 வயது இருக்கும். எனக்கு அப்போது சுமார் 15 வயது இருக்கும். முத்துசாமியின் மனைவி பெயர் பெருமாயி. பெருமாயி இறந்து சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். அவர் மேட்டூர் வட்டம், பாரகல்லூர் ஊரை சேர்ந்தவர். பெருமாயினுடைய பெற்றோர் பெயர் என்ன என்றால் சின்னதம்பி. அவர் எனக்கு தாய் மாமன்தான். சின்னதம்பியின் மனைவி பெயர் எனக்கு தெரியவில்லை. அதுபோன்று யாரும் இல்லாததால்தான் எனக்கு தெரியவில்லை என்றும் இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

கந்தாயிக்கு முத்துசாமி என்ற மகனே இல்லை என்றும் கந்தாயிக்கு குழந்தையே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சங்கதி -கள் எனக்கு நன்றாக தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக நான் வேண்டுமென்றே பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

இன்பவள்ளிக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். அவருடைய கணவர் பெயர் ரவி. அவர்களுக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள். அவர்கள் சூரமங்கலத்தில் வசிக்கின்றனர். இன்பவள்ளி படிக்கவில்லை. இன்பவள்ளியை பழனிசாமி வளர்த்தார். இன்பவள்ளி பழனிசாமியின் மகள் என்றும் முத்துசாமியின் மகள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வாதியை ஊரில் முத்து என்று அழைப்பார்கள் என்றும் ஆனால் அவருடைய பெயர் முத்துசாமிதான் என்றும் அனைத்து ஆவணங்களிலும் முத்துசாமி என்ற பெயர்தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அவருடைய பல்வேறு ஆவணங்களில் முத்து என்றுதான் பெயர் உள்ளது. முத்து என்கிற முத்துசாமி என்பவர் வாதிதான் என்றும் இரண்டு பெயர்களும் வெவ்வேறு நபர்களை குறிக்காது என்றும் சொன்னால் சரியல்ல. முத்துசாமி யாருடைய பேச்சையும் கேட்காமல் தன்னிச்சையாக திரிந்து 03-ஆம் பிரதிவாதி இன்பவள்ளியை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முத்துசாமி 10.03.1985-ஆம் தேதியன்று இறந்துவிட்டார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. முத்துசாமி பெயரில் வாங்கப்பட்ட இறப்பு சான்றிதழும் வாரிசு சான்றிதழும் பொய்யாக புனையப்பட்டவை என்றால் சரியல்ல. கந்தமூப்பன் உயிருடன் இருந்தபோது அவருடைய

மகன்கள் பெயரில் உரிமைமாற்ற ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றால் சரிதான். கந்தமூப்பனுக்கு சிக்கம்பட்டி ஊரில் இருந்த சொத்தில் பெரும்பகுதி வாதிக்கு ஒதுக்கப்பட்டு வாதி அதை அனுபோகம் செய்கிறார் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சிக்கம்பட்டி சொத்திற்காக நடக்கவில்லை என்றால் சரிதான்.

23.05.1980-ஆம் தேதியன்று பழனிசாமியிடம் நான் 29 ¾ சென்ட் நிலத்தை கிரயம் வாங்கியது செல்லாது என்றும் அந்த சொத்தை அந்த தேதியில் விற்க பழனிசாமிக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி பலமுறை பாகம் கேட்டும் பிரித்துக் கொடுக்காததால்தான் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 22.06.2016-ஆம் தேதியன்று வாதி வில்லங்க சான்று எடுத்து பார்த்தபோதுதான் மேற்படி விவரங்கள் தெரியவந்தது என்றும் அதனால்தான் மேற்சொன்ன கிரயப்பத்திரம் 03 முதல் 05 பிரதிவாதிகள் எனது பெயரில் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரங்கள் செல்லாது என்றும் அதன் அடிப்படையில் நான் என் மனைவிக்கு எழுதிக் கொடுத்த அறுதியாவணம் செல்லாது என்றும் இந்த வழக்கை தொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ளபடி நிவாரணம் பெறுவதற்கு வாதி உரிமையுடையவர் என்றால் சரியல்ல. நான் வாதுரையில் சொல்லாத பல சங்கதிகளை சாட்சியத்தில் சொல்லியுள்ளது ஏற்புடையது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.